# 20 இறைவனின் திருப்பெயரை மாட்சிப்படுத்தல்

> உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே; ஏனெனில், தம் பெயரை வீணாகப் பயன்படுத்துபவரை ஆண்டவர் தண்டியாது விடார்.
>
> (விப. 20:7)

இப்பகுதியை வாசித்து சிறிது நேரம் தியானியுங்கள். இதில் கூறப்படும் விடயம் தொடர்பாகச் சிந்தியுங்கள்.

இறைவன் அதி பரிசுத்தமானவர். தம்மில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தமது பெயரை வெளிப்படுத்தினார். இறைவனின் திருப்பெயர் மிகவும் புனிதமானதாகும். எனவே அவரது திருப்பெயரை மரியாதையாகப் பயன்படுத்துதல் வேண்டும். ஆசீர்வாதம், புகழ்ச்சி, மன்றாட்டு அல்லது இறைவனை மகிமைப்படுத்துதல் என்பவற்றைத் தவிர தேவையற்ற விதமாக அவரது திருப்பெயரை உச்சரிக்கக் கூடாது.

பத்துக் கட்டளைகளில் இரண்டாவது கட்டளை இறைவனின் திருப்பெயரை வீணாகச் சொல்லாதிருப்பது என்பதை வெளிப்படுத்துகின்றது. இறைவனின் திருப்பெயரை உச்சரிக்கும் போது பக்தி மரியாதையுடன் உச்சரிக்க வேண்டும்.

### பழைய ஏற்பாட்டின் படிப்பினைகள்

> உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கே அஞ்சுங்கள்; அவருக்கே பணிபுரிந்து அவரைப் பற்றிக்கொள்ளுங்கள். அவர் பெயராலே ஆணையிடுங்கள்.
>
> (இச. 10:20)

அரசரோ கடவுளை நினைத்துக் களிகூர்வார்; அவர்மேல் ஆணையிட்டுக் கூறுவோர் அனைவரும் பெருமிதம் கொள்வர்; பொய் சொல்வோரின் வாய் அடைக்கப்படும்.

(திபா. 63:11)

மேற்கூறப்பட்ட திருவிவிலியப் பகுதிகளிலிருந்து பழைய ஏற்பாட்டில் ஆணையிடுதல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் செயலாகக் காணப்படுகிறது.

## கிறிஸ்துவின் படிப்பினைகள்

ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின் மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனென்றால் அது கடவுளின் அரியணை.
மண்ணுலகின் மேலும் வேண்டாம்; ஏனெனில் அது அவரின் கால்மணை. எருசலேம் மேலும் வேண்டாம்; ஏனெனில் அது பேரரசரின் நகரம்.

உங்கள் தலைமுடியின் மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனெனில் உங்கள் தலைமுடி ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ உங்களால் இயலாது.
ஆகவே நீங்கள் பேசும்போது 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும் 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது.

(மத்.5:34 - 37)

மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதியின்படி இயேசுகிறிஸ்து ஆணையிடுதல் அல்லது சத்தியம் செய்தலை முற்றாக வெறுக்கிறார் என்பது தெளிவாகின்றது.

## தூய பவுலின் படிப்பினைகள்

என் உயிரின் மேல் ஆணையாகச் சொல்கிறேன்; உங்களை வருத்தத்துக்கு உள்ளாக்காமல் இருக்கவே இதுவரை நான் கொரிந்துக்கு வரவில்லை. கடவுளே இதற்குச் சாட்சி. (2கொரி. 1:23)

நான் உங்களுக்கு எழுதுவதில் பொய் ஒன்றுமில்லை; இதற்குக் கடவுளே சாட்சி!

(கலா. 1:20)

தூய பவுல் சத்தியம் செய்வதை அனுமதிக்கின்றார், என்பது மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதியில் காணப்படுகின்றது.

## தூய திருச்சபையின் படிப்பினைகள்

நீதியின் முன் ஒருவர் தான் சொல்வது உண்மையென அறிந்திருந்தால் அச்சந்தர்ப்பத்தில் சத்தியம் செய்ய முடியும். ஆகவே கனமான ஒரு விடயத்தில் ஆணையிட முடியுமென திருச்சபை கற்பிக்கின்றது. எனவே அவ்வாறான சந்தர்ப்பத்தில் உண்மையை மட்டும் வெளிப்படுத்த வேண்டும். பொய்யான வாக்குறுதிகளைச் செய்யாதிருத்தல் வேண்டும். அவ்வாறு செயற்படுவது இரண்டாம் கட்டளைக்கு எதிரான பாவமாகும்.

பத்துக் கட்டளைகளில் எட்டாவது கட்டளை ‘‘பொய்ச்சாட்சி சொல்லாதிருப் பாயாக’’ என்பதாகும். இக்கட்டளைக்கேற்ப பொய் சொல்வது தவிர்க்கப்பட்டுள்ளது. ஏதேனும் ஒன்றின் உண்மை நிலையை அறியாது அது தொடர்பாக சாட்சியம் கூறுவது இறை கட்டளைக்கு எதிரான பாவமாகும்.

## நேர்ச்சை தொடர்பான திருச்சபையின் படிப்பினைகள்

இறைவனை மாட்சிப்படுத்துவதற்காக தம் சொந்த விருப்பின்படி ஒரு செயலைச் செய்ய வாக்குப்பண்ணுவதே நேர்ச்சை எனப்படும். நேர்ச்சை என்னும் சொல்லின் பொருள் சுமையைக் குறைத்தல் அல்லது விடுபடல் என்பதாகும். அதாவது ஒரு சுமையிலிருந்து விடுபடுதல் ஆகும்.

ஆனால் நேர்ச்சை செய்யாதிருந்தால் அது உனக்குப் பாவமாகாது.

(இச. 23:22)

இன்று நேர்ச்சை என்பது இலஞ்சம் கொடுப்பதற்கு ஒப்பாகின்றது. அதாவது 'நீங்கள் ஏதாவது ஒன்றைத் தருவதாயின் நானும் தருவேன்' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நேர்ச்சை இறைவனோடு செய்துகொள்ளும் பண்டமாற்று அல்ல, இறைவனுக்குச் சொந்தமானதை இறைவனுக்குக் கையளிப்பதாகும். தூய்மையான மனநிலையோடு மேற்கொள்ளும் ஒரு செயலாகும். அதாவது நேர்ச்சையை ஒப்புக் கொடுப்பவரின் மனப்பாங்கு இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்கவேண்டும்.

இறைவன் எமக்குக் கிடைக்கச் செய்த ஒன்றுக்காக தூய உள்ளத்தோடு நன்றிகூறுதல், மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல், புகழ்தல் அல்லது நம்பிக்கையை அறிக்கையிடுதல் ஆகியவற்றுக்காக ஏதேனும் ஒன்றை ஒப்புக்கொடுத்தல் தொடர்பாக சிந்தித்துப் பார்த்தல் அவசியம்.

### இக் கட்டளை தொடர்பாக நாம் கடைப்பிடிக்க வேண்டியவை

- ✝ ஒருவர் கடவுளின் தூய பெயரைப் போற்றும் போதும் புகழும் போதும், மாட்சிப்படுத்தும் போதும் கடவுளின் பெயருக்கு மரியாதை செலுத்துகிறார். கடவுளின் திருப் பெயரை முறையற்ற வழியில் பயன்படுத்துவது தவறாகும்.

- ✝ நாம் பிறருக்கு கொடுக்கும் வாக்குறுதிகளைப் பிரமாணிக்கமாக நிறைவேற்ற வேண்டும்.

## செயற்பாடு

1. விப. 20:7 இன்படி பத்துக் கட்டளைகளில் இரண்டாம் கட்டளையை எழுதுக.

2. 'இறைவனின் திருப்பெயர் புனிதமானது' என்ற தலைப்பின் கீழ் சுவர்ப்பத்திரிகைக்கு ஒரு செய்தி எழுதுக.

## வாழ்க்கைக்கு

இறைவனின் திருப்பெயரைப் பக்தியுடன் உச்சரியுங்கள்.